பக்கங்கள் 13 + 05

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## ஹெலிக்கொப்டர் விபத்தில் ஈரான் அதிபர் ரைசி மரணம்



(விரிவான செய்தி உலகப் பக்கத்தில்)

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 வைகாசி 07 திங்கட்கிழமை 20.05.2024 அதிர்வு 294



ஐ.நாவில் தீர்மானங்கள் நிறைவேறுகின்றன; இங்கே தீர்வுகள்தான் இல்லை

# தமிழர்களின் நினைவேந்தல் உரிமையைக் கூட சர்வதேசத்தால் உறுதிப்படுத்த முடியவில்லையே!

### மனோ எம்.பி. இப்படி ஆதங்கம்

"வருடா வருடம் முரண்பாடுகள், கைதுகள், கெடுபிடிகள் என்பன ஏற்படா வண்ணம், நினைவேந்தல் தொடர்பில், ஒரு பொதுக் கொள்கையை அறிவியுங்கள். விடுதலைப்புலிகள் இயக்கம் மீதான தடை இருப்பதால், அந்த இயக்கத்தின் சின்னங்களைப் பயன்படுத்தாமல், கொல்லப்பட்ட தமது உறவுகளை நினைந்து நினைவேந்தல் நிகழ்வுகளை தமது வீடுகளிலோ, பகிரங்கத் தளங்களிலோ நடத்த தமிழ் மக்களுக்கு ஐ.நா. அங்கீகரித்த உரிமை இருக்கின்றது என்ற குறைந்த பட்ச விடயத்தைக் கூட இலங்கை ஆட்சியாளர்களின் தலைகளில் திட்டவட்டமாக புகுத்த சர்வதேச சமூகம் இதுவரை தவறியுள்ளது."

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார். 04▶

# பிறந்தநாளில் இராணுவ வாகனம் மோதி இளம் யுவதி ஒருவர் பரிதாப உயிரிழப்பு!

### யாழ். புத்தூரில் சோகம்

(ந.லோகதயாளன்)

யாழ். புத்தூர் பகுதியில் இராணுவ வாகனம் மோதி இளம் யுவதி ஒருவர் பரிதாபகரமாகச் சாவடைந்துள்ளார்.

புத்தூர், வாதரவத்தையைச் சேர்ந்த 23 வயதுடைய சுதாகரன் சாருஜா என்ற யுவதியே உயிரிழந்துள்ளார்.

சைக்கிளில் பால் எடுக்கச் சென்ற வேளை, புத்தூர் – கனகம்புளியடி வீதியில் வீரவாணி சந்திக்கு அருகில் 04▶



# ரணிலுடன் நாம் சங்கமிக்கவேமாட்டோம்; சஜித்தை ஜனாதிபதியாக்கியே தீருவோம்



### முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவர் திகாம்பரம் சூளுரை

தமிழ் முற்போக்குக் கூட்டணி ரணில் அரசுடன் இணையவே மாட்டாது என்று அக்கூட்டணியின் பிரதித் தலைவரும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலின்போது சிறுபான்மையினக் கட்சிகள் சஜித்துக்கே ஆதரவு வழங்கும் எனவும், சஜித்தே 04▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally



# திருடர்களிடம் இருந்து நாட்டைக் காப்பாற்ற இராணுவத்தினரே எம்மோடு இணையுங்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அழைப்பு

“பயங்கரவாதிகளிடமிருந்து நாட்டைக் காப்பாற்றித் தந்தது போல் திருடர்களிடம் இருந்து நாட்டைக் காப்பாற்ற இராணுவத்தினர் எம்மோடு ஒன்றிணைந்துகொள்ள வேண்டும். நாட்டின் அரசியல் அதிகாரம் சரியான தலைமைத்துவத்தை வழங்கியிருந்தால் நாடு வளமான நாடாக மாறியிருக்கும்.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தாய்நாட்டின் சுதந்திரத்துக்காக உயிர்த் தியாகம் செய்த இராணுவத்தினருக்கு நன்றி பாராட்டும் முகமாக நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் இராணுவ வீரர்களது மாநாட்டின் 6 ஆவது கட்டம் நேற்று மொனராகலையில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாட்டின் அரசியல் அதிகாரம் சரியான தலைமைத்துவத்தை வழங்கியிருந்தால், இராணுவத்தினரால் பயங்கரவாதத்தில் இருந்து பாதுகாத்துத் தரப்பட்ட எமது நாடு வளமான நாடாக மாறியிருக்கும். இப்போதும் நாட்டைக் காப்பாற்றும் பணி எம்முன் உள்ளது. திருட்டு, ஊழல், மோசடி, கொள்ளை மற்றும் தேசிய சொத்துக்கள் மற்றும் வளங்களை வீணடிப்பதை இல்லாதொழிக்க இராணுவத்தினர் தலையிட வேண்டும். நாட்டைக் கட்டியெழுப்பும் மனிதாபிமானப் பணியில் பங்காளராகுமாறு இராணுவத்தினரிடம் கோரிக்கை விடுக்கின்றேன்.

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் வலுவான சட்டக் கட்டமைப்பின் மூலம் நாட்டை அழித்த அனைவரும் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படுவது போலவே, இழந்த வளங்கள் மற்றும் சொத்துக்கள், பணத்தை நாட்டுக்கு மீளப் பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான மனிதாபிமான நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

2019 ஜனாதிபதித் தேர்தலின் போது ஐக்கிய மக்கள் சக்தி குறுகிய காலத்தில் இராணுவத்தினருடன் சமூக ஒப்பந்தத்தை எட்டியது. அந்தச் சமூக ஒப்பந்தம் மிகவும் முறையாகவும், ஒழுங்காகவும், வினைதிறனாகவும், மாவட்ட மட்டத்தில் திட்டமிட்ட முறையிலும் கட்டமைக்கப்பட்டுள்ளது. இதுவரை 6 இராணுவ வீரர் மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன. மாவட்ட மட்டத்தில் இராணுவ வீரர்களின் ஆலோசனைகள் கருத்தில்கொள்ளப்பட்டதன் பின்னர் புதிய சமூக ஒப்பந்தம் எட்டப்படும். ‘திவிதென ரணவிரு வேலைத்திட்டம்’ என இதற்குப் பெயரிடப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் நம் நாட்டுக்காகத் தங்கள் உயிரைத் தியாகம் செய்தவர்கள். 220 இலட்சம் மக்களினது சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் பாதுகாத்துத் தந்தனர். அந்தப் பணி இன்னும் முடிவடையவில்லை. நாட்டைக் கட்டியெழுப்புவதற்கும், மக்களை ஊக்குவிப்பதற்கும் இன்னும் பல கடமைகள் அவர்களுக்கு உண்டு. அவர்கள் நாட்டின் முக்கிய சமூக அபிவிருத்தி நீரோட்டத்தின் முன்னோடிகளாக மாற வேண்டும்.

நாட்டுக்காகச் சிறந்த சேவையாற்றிய இந்த இராணுவத்தினர் பாதுகாக்கப்படுவார்கள். அவர்களைக் கவனித்துக் கொள்வோம். பதவியேற்று 48 மணித்தியாலங்களுக்குள் இராணுவத்தினர்களின் பொருளாதார மற்றும் சமூக உரிமைகளைப் பாதுகாப்பதற்கு விசேட ஜனாதிபதி செயலணி ஒன்றை ஸ்தாபிப்பேன். இராணுவத்தினர் தொடர்பான கட்டளைகள் காலத்துக்கு ஏற்றால் போல் புதுப்பிக்கப்படும். ஒரே தரம் ஒரே ஓய்வூதியக் கொள்கையை ஆய்வு செய்து வருகின்றேன். அதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பேன்.

**(05ஆம் பக்கம் பார்க்க)**





# மாந்தை மேற்கு சாளம்பனில் கழிவு நீர் கால்வாய் புனரமைப்பு





**(மன்னார் )**

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சாளம்பன் கிராமத்தில் நீண்ட காலமாக காணப்படும் கழிவு நீர் கால்வாய் புனரமைப்பு செய்யும் நடவடிக்கை வெள்ளிக்கிழமை (17) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் அரவிந்தராஜா தலைமையில் இந்த வேளைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. விழுதுகள் ஆற்றல் மேம்பாட்டு மையம் மற்றும் ஜி.ஐ.இசட். நிறுவனம் இணைந்து கோப் வேலைத் திட்டத்தின் கீழ் 4.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் குறித்த கால்வாய் புனரமைப்பு வேலைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

'கால்வாய்களைப் புனரமைப்பதன் மூலம் சமூகத்தை ஒன்றிணைக்கும் திட்டம்' எனும் தொனிப்பொருளில் சாளம்பன் கிராமத்தில் விழுதுகள் ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் மாவட்ட உத்தியோகத்தர் ஜெகநாதன் டலிமா தலைமையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த வாய்க்கால் புனரமைப்புச் செய்யப்படாது இருந்தமையால் மழை காரணமாக குறித்த கிராமத்தில் வெள்ளம் ஏற்படும் நிலை காணப்பட்டது. இந்த நிலையில் விழுதுகள் ஆற்றல் மேம்பாட்டு மையம் மற்றும் ஜி.ஐ.இசட். நிறுவனம் இணைந்து கோப் வேலைத் திட்டத்தின் கீழ் 4.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கால்வாய் புனரமைப்பு வேலைத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர்.

நிகழ்வில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் அரவிந்தராஜா, ஜி.ஐ.இசட். நிறுவனத்தின் ஆலோசகர் சொர்ணம் பெர்ணான்டோ, மத தலைவர்கள், நீர் பாசன பொறியியலாளர் உள்ளடங்களாக கிராம மக்களும் கலந்து கொண்டனர்.





# 25 போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் சிக்கினார்

போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் சங்கானைப் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞரைப் பொலிஸார் சோதனையிட்டபோது, அவரின் உடைமையில் இருந்து 25 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளனர்.

அதனையடுத்து இளைஞரைக் கைது செய்து பொலிஸார், மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தமிழர்களின்...

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

“அகோர யுத்தம் நிறைவடைந்து இன்று 15 ஆண்டுகள் ஆகிவிட்டன. அன்று அகோர யுத்தத்துக்கு முழுமையான ஆதரவு, ஒத்துழைப்புகளை அன்றைய இலங்கை அரசுக்கு வழங்கிய சர்வதேச சமூகம், தமிழர்களைப் பார்த்து யுத்தம் முடிந்தவுடனேயே அரசியல் தீர்வையும், பொறுப்புக்கூறலையும் பெற்றுத் தருவதாக உறுதி கூறியது. தமிழ் மக்களின் பிரதிநிதிகளிடம் உறுதி கூறியது. இலங்கை வந்து சென்ற அனைத்து ஐ.நா. மற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள், உள்நாட்டில் பணியாற்றும் இராஜதந்திரப் பிரதிநிதிகள் அனைவரும், அன்றைய தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் என்ற முறையில் என்னைச் சந்தித்து, என்னிடம் இந்த உறுதிப்பாட்டை பலமுறை கூறி உள்ளனர்.

ஆனால், இன்று நிலைமை என்ன? அரசியல் தீர்வு, பொறுப்புக்கூறல் என்பன ஒருபுறம் இருக்க, யுத்தம் நிறைவு அடைந்து 15 வருடங்கள் ஆகி விட்ட இன்று, தமது உறவுகளை நினைந்து நினைவேந்தல்கள் நிகழ்த்தி கண்ணீர் விடும் குறைந்த பட்ச உரிமையைக் கூட சர்வதேச சமூகம் இலங்கை தமிழ் மக்களுக்குப் பெற்றுத் தர தவறியுள்ளது. இலங்கை பொலிஸாரால் கைதுகள், கெடுபிடிகள் நடத்தப்படுகின்றன.

வருடா வருடம் மத தல யாத்திரை போவதைப் போல் தமிழ் மக்களின் பிரதிநிதிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஜெனிவா போய் வருகின்றார்கள். அங்கு தீர்மானங்கள் வருடா வருடம் நிறைவேறுகின்றன. ஆனால், இங்கே நாட்டுக்குள்ளே தீர்வுகள் இன்னமும் வரவில்லை.

ஆகவே, சர்வதேச சமூகம் இலங்கை அரசியல் மனித உரிமை பிரச்சினைகளை சரியாக கையாளவில்லை என்பது நிரூபணமாகியுள்ளது. இலங்கை வந்து செல்லும் மற்றும் உள்நாட்டில் பணியாற்றும் இராஜதந்திரப் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து வெறுமனே தலையாட்டி விட்டு வர எனக்கு முடியாது. எனது சமூக ஊடகத் தளங்கள் மூலம் நான், இலங்கைத் தமிழ் மக்கள் தொடர்பில் கடமையைச் சரியாகச் செய்ய, சர்வதேசம் தவறி விட்டது எனக் கூறியுள்ளேன்.

இதனால் பிரபல மேற்கு நாடு ஒன்றின் தூதுவர், மனம் வருந்துவதாக எனக்குச் செய்தி அனுப்பியுள்ளார். அவர் எனது நண்பர். அவரது மன வருத்தம் தொடர்பில் நானும் வருந்துகின்றேன். கொழும்பு மேற்கு நாட்டு இராஜதந்திரிகள் சந்திப்பிலும் இது பற்றி பேசப்பட்டதாக அறிகிறேன். எனது நிலைபாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை. சர்வதேசம் இலங்கைத் தமிழ் மக்கள் தொடர்பில் கடமையைச் சரியாகச் செய்யவில்லை என்ற என் நிலைப்பாடு சரியானது. சர்வதேச சமூக நண்பர்களிடம் எனக்குத் தனிப்பட்ட கோபங்கள் கிடையாது. வரவும் கிடையாது. செலவும் கிடையாது.

நான் என்னை நம்பும் அப்பாவி மக்களுக்காக உண்மையைக் கூறுறேன். அவ்வளவுதான். இதன் பிறகாவது, இலங்கைத் தமிழ் மக்கள் தொடர்பில் தம் நிலைபாடுகளை சர்வதேச சமூகம் மீளாய்வு செய்யுமானால், கொழும்பில் பணியாற்றும் இராஜதந்திரப் பிரதிநிதிகள் தங்கள் நாட்டு அரசுகளுக்கு இது பற்றி அறிவிப்பார்களாயின் நான் மகிழ்ச்சியடைவேன்.” – என்றார்.

### பிறந்தநாளில்...

இராணுவ வாகனம் மோதியதில் யுவதி படுகாயமடைந்துள்ளார்.

அவரை அங்கிருந்தவர்கள் மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற வேளை உயிரிழந்துள்ளார்.

யுவதியின் சடலம் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த யுவதியின் பிறந்தநாள் இன்றைய தினம் என்பது குறிப்பிடத்தக்கது.

விபத்துச் சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவத்தினரிடம் அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### ரணிலுடன்...

அந்தத் தேர்தலில் வெற்றி பெறுவார் எனவும் பழனி திகாம்பரம் கூறினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“ரணிலும் சஜித்தும் இணைய வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள ஓரிருவர் கூறுகின்றனர். அவர்கள் அவ்வாறு கூறினாலும் கட்சியை விட்டுச் செல்லமாட்டார்கள். எனினும், பலர் ஐக்கிய தேசியக் கட்சிப் பக்கம் செல்லவுள்ளனர் என்று போலித் தகவல்கள் பரப்பப்படுகின்றன.

நானோ, மனோ கணேசனோ அல்லது இராதாகிருஷ்ணனோ அரசு பக்கம் செல்லமாட்டோம். ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன் உள்ளிட்டவர்களும் செல்ல மாட்டார்கள்.” – என்றார்.



# திருடர்களிடம் இருந்து நாட்டைக் காப்பாற்ற இராணுவத்தினரே எம்மோடு இணையுங்கள்

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரணவிரு சேவா அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ள சட்ட அதிகாரங்களும் ஏற்பாடுகளும் போதுமானதாக இல்லை. இராணுவத்தினரின் நலன்புரிச் செயற்பாடுகளுக்காக அமெரிக்கா தனித்த திணைக்களத்தைக் கொண்டுள்ளது. இந்தத் திணைக்களத்தின் ஊடாக இராணுவத்தினரின் நலனுக்காக அமெரிக்கா நடவடிக்கை எடுத்து வருகின்றது. இலங்கையில் அவ்வாறானதொரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டு, இராணுவத்தினரின் பிரச்சினைகளுக்குப் பதில் வழங்கும் நிறுவனமொன்று ஸ்தாபிக்கப்படும்.

ஓய்வுபெற்ற பிறகு மாற்று வருமான மூலங்களைத் தொடுவதற்குப் படையினர் விரும்புகின்றார்கள். நாட்டிலுள்ள மக்கள் மத்தியில் அதிக தியாகங்களைச் செய்யக்கூடியவர்கள், தொழில் மற்றும் வளர்ச்சிக்கான ஆக்கபூர்வமான யோசனைகளைக் கொண்டவர்கள் என்பதனால், ஓய்வுபெற்ற பிறகும் அவர்களின் தியாகத்துக்குச் சரியான பெறுமானம் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். மாற்றுத் தொழில்கள் மற்றும் வருமான வழிகளை உருவாக்குவதற்கான பிரவேசத்துக்கு சலுகை அடிப்படையில் நிதி அணுகல் வழங்கப்படும்.

ஓய்வுபெற்ற இராணுவத்தினர் தற்போது பல்வேறு தனியார் பாதுகாப்பு நிறுவனங்களில் பணியாற்றி வருகின்றனர். தெளிவான, முறையான சம்பள ஒழுங்குமுறை மற்றும் காப்புறுதி முறைமை இல்லாத காரணத்தால், திவி தென ரணவிரு நலன்புரி திட்டத்தின் கீழ் காப்புறுதி வழங்கப்படும். ஓய்வுபெற்றவர்களின் சேமிப்புக் கணக்குகளுக்கு அதிக வட்டி வீதம் கிடைத்து வந்தது. என்றாலும் தற்போது அது குறைக்கப்பட்டுள்ளது. எனவே, அந்த வட்டி விகிதங்களை மீண்டும் வழங்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி அரசில் நடவடிக்கை எடுப்போம்.

மேலும் திவிதென ரணவிரு அமைப்பின் அடையாளத்தை பாதுகாக்க அடையாள அட்டைகள் வழங்கப்படும். எல்.ரீ.ரீ.ஈ பயங்கரவாதிகளுடனான யுத்தத்தின்போது காணாமல் ஆக்கப்பட்ட, ஆதரவற்ற குடும்பங்களுக்கு விசேட வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்படும். யுதத்தின் போது அங்கவீனமுற்ற இராணுவத்தினர் பாரிய அநீதிக்கு ஆளாகியுள்ளனர்.

கோட்டாபய ராஜபக்ஷ அரசு அங்கவீனமுற்ள இராணுவத்தினருக்குத் தெளிவான அநீதி இழைத்த போதிலும், ஐக்கிய மக்கள் சக்தி அரசில் அந்தக் கடமைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும்.” – என்றார்.







# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஜே.வி.பியின் திட்டம்

இலங்கையில் அடுத்த அதிகார நிலைக்காகப் போட்டியிடும் தரப்புகள் அனைத்துமே இரத்தக்கறை படிந்த கடந்த கால சரித்திரத்தைத் தம் வசம் கொண்டவைதான்.

தமிழின அழிப்பில் மட்டுமல்ல, தம்மின அழிப்பிலும் அவற்றின் செங்குருதி சிந்த வைத்த சாதனை பெரியது.

அந்தக் கூத்தில் புதிய கட்டம் - புதிய அத்தியாயம் - ஒன்றை திறந்து விடுவது குறித்து இப்போது பிரஸ்தாபித்திருக்கின்றது ஜே.வி.பியையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தி.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து பிறப்பெடுத்தது பொதுஜன பெரமுன. சுதந்திரக் கட்சியின் இரத்தக்கறை படிந்த வரலாறு, 1971 இல் ஜே.வி.பி. கிளர்ச்சியை அடக்குவதற்கு அது பயன்படுத்திய கொடூரத்திலிருந்து ஆரம்பித்து, 2009 முள்ளிவாய்க்கால் மூர்க்கம் வரையிலும் - அதன் பின்னரும் கூட - பெருங்குரூரமாய்த் தொடர்கின்றது. யுத்தக் களத்திற்கு அப்பால் தென்னிலங்கையில் தம்மின ஊடகவியலாளர்களைப் படுகொலை செய்தமை, காணாமலாக்கப்பட்டமை வரை அன்றைய நீல, இன்றைய ஊதாக் கட்சிக்காரர்களின் சரிதம் அப்பட்டமானது; மோசமானது.

அதே போன்றதுதான் - அதற்கு கொஞ்சமும் குறைந்தது அல்ல - ஐக்கிய தேசியக் கட்சியினரதும், அதன் வழி வந்த ஐக்கிய மக்கள் கட்சியினரதும் பழைய சரித்திரங்கள்.

1989 - 90களில் தம்மின மக்களின் கிளர்ச்சியைக் கூட ஐக்கிய தேசியக் கட்சி எப்படி அடக்கியது என்பது மறைக்க - மறக்க - மறுக்க - கூடிய வரலாற்றுப் பாடங்கள் அல்ல.

ஜே.வி.பியைப் பொறுத்தவரை அதன் ஊற்றுக்கண்ணே வன்முறைக் கருவறைதான். அதன் ஆரம்ப இருபது ஆண்டு கால வரலாறும் இரத்தக் காட்டேரி அட்டகாசம் போன்றது.

1970களின் ஆரம்பத்திலும், 1980 களின் இறுதியிலும் வர்க்கப் போராட்ட விடுதலை என்ற பெயரில் ஜே.வி.பியினர் புரிந்த வன்முறை அட்டூழியம் - அட்டகாசம் - இலங்கைத் தீவின் வரலாற்றில் பெரும் கரும்புள்ளி. சட்டத்திற்கு விரோதமான முறையில் - குறிப்பாக தங்கள் அரசியல் விரோதிகளை - கொன்றொழித்த ஜே.வி.பியினரின் பயங்கரவாதம் இப்போது நினைத்தாலும் குலைநடுங்க வைக்கும் குரூரம் கொண்டது.

இந்தத் தரப்புகள் எல்லாம் மீண்டும் ஆட்சிக்கட்டை பிடிப்பதற்கு அரசியல் துவந்த யுத்தம் நடத்துகின்றன. அதில் ஒரு தரப்பான ஜே.வி.பி. வாக்குச் சுவீகரிப்புக்காக புதிய அறிவிப்பு ஒன்றை - ஆபத்தான திட்டம் ஒன்றை - முன்வைக்கின்றது.

நாட்டின் அரசமைப்புக்கு முரணான அந்தத் திட்டம் குறித்து பொதுத் தரப்புகள் எல்லாம் நேரத்துடன் எச்சரிக்கை ஒலி எழுப்பத் தொடங்கிவிட்டன.

தாங்கள் அடுத்த அரசை ஸ்தாபித்தால், கிராம மக்கள் நீதித்துறை அதிகாரத்தை கிராம மட்டத்தில் அவர்களே பிரயோகிக்கும் நடைமுறையைக் கொண்டு வருவோம் என ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் கட்சியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் லால் காந்த விடுத்த அறிவிப்பை அக்கட்டமைப்பு அங்கீகரித்து உறுதிப்படுத்தி இருக்கின்றது.

இலங்கையின் அரசமைப்பு படி, மக்களின் நீதித்துறை அதிகாரம் - நாடாளுமன்றத்தின் சிறப்புரிமை விவகாரம் தவிர்ந்த விடயங்கள் அனைத்திலும் - சட்டத்தினால் ஸ்தாபிக்கப்படும் நீதித்துறை மூலம் மட்டுமே பிரயோகிக்கப்படும் என்பது தெளிவாகவும் திட்டவட்டமாகவும் உரைக்கப்பட்டிருக்கின்றது.

அப்படியிருக்க, கிராம மட்டத்தில் நீதித்துறை அதிகாரங்களை கிராம மக்களே பிரயோகிப்பர் என புதிய, ஆபத்தான திட்டம் ஒன்று பற்றி ஜே.வி.பி. இப்போது பேசத் தலைப்பட்டிருக்கின்றது.

ஜே.வி.பியின் வன்முறைப் போக்குக் காலத்தில் - 1970 களின் முற்பகுதியிலும் 1980 களின் பிற்பகுதியிலும் - அத்தரப்பு நீதித்துறை அதிகாரங்களை கையில் எடுத்து நடத்திய சண்டப்பிரசண்டம் உலகறிந்தது.

ஜே.வி.பியை ஆட்சி அதிகாரத்தில் அமர்த்தினால், நீதித்துறை அதிகாரங்களை கிராம மட்டத்தில் கிராம மக்களிடமே நேரடியாக ஒப்படைப்பது என்ற பெயரில் பெரும் திருக்கூத்தைத்தான் அக்கட்சி நடத்தி முடிக்கும் என்பது இப்போது நேரத்துடனேயே அம்பலமாகி வருகின்றது.

இத்தகைய தரப்பிடம் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைத்துவிட்டுப் பிறகு, 'சுடுகுது மடியை பிடி!' என்று துடிப்பதிலும் பார்க்க, நேரத்துடன் எச்சரிக்கையாக நடந்து கொள்வது நல்லது என்பதை தென்னிலங்கைச் சகோதரர்களிடம் கூறி வைக்க விரும்புகிறோம்.




# நிதி ஒதுக்கீட்டுக்கான ஆவணங்கள் வழங்கல்



(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பிரதி தலைவருமான செய்யித் அலி ஸாஹிர் மௌலானா, 2024 ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் 100 மில்லியன் ரூபா நிதியை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் ஒதுக்கீடு செய்துள்ளார்.

இந்த நிலையில் ஏறாவூர் நகர் மற்றும் ஏறாவூர் பற்று பிரதேச செயலர் பிரிவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட பாடசாலைகள், வழிபாட்டுத்தளங்கள்,சமூக மட்ட அமைப்புக்கள் மற்றும் பொது நிறுவனங்கள், என்பவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டுக்கான ஆவணகள் கையளிக்கும் நிகழ்வு ஏறாவூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலாளர் திருமதி நிஹாரா மௌஜூத், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ஏ. சியானா, ஏறாவூர் நகரசபையின் செயலாளர் எம்.எச்.எம். ஹமீம், உதவிக்கல்வி பணிப்பாளர் ஏ.எம். முபாஸ்தீன் உட்பட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி முக்கியஸ்த்தர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் 68 திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீட்டுக்கான ஆவணக் கடிதங்கள் நாடாளுமன்ற உறுப்பினரால் வழங்கப்பட்டன.



# மட்டக்களப்பில் இலக்கிய அமைப்புகள் நடத்திய பன்னாட்டு ஆய்வு மாநாடு!








**(பழுவூரான்)**

மட்டக்களப்பு மாவட்ட எழுத்தாளர் சங்கம், மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கம், சென்னை செம்மூதாய் பதிப்பகம், செம்புலம் ஆய்விதழ்,அந்தமான் தமிழ் இலக்கிய மன்றம் மற்றும் பிரான்ஸ் வள்ளலார் சன்மார்க சங்கம் ஆகிய இலக்கிய அமைப்புகள் ஒன்றிணைந்து நடத்திய “தமிழர் பண்பாடும் செல்நெறிகளும்” என்னும் தலைப்பிலான பன்னாட்டு ஆய்வு மாநாடு மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட எழுத்தாளர் சங்கத் தலைவரும்,பன்னாட்டு மாநாட்டுத் தலைவரும், முதுநிலை விரிவுரையாளருமான கலாநிதி முருகு. தயாநிதி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினர்களாக திருமதி ஜே.முரளிதரன் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும்,சென்னை கிறிஸ்தவக் கல்லூரி தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் சு. சதாசிவம், மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சைவப் புரவலர் வி. றஞ்சிதமூர்த்தி, அந்தமான் மேனாட்டுத் தலைமைப் பொறியியலாளர் என். கிருஷ்ணமூர்த்தி,அந்தமான் தமிழ் இலக்கிய மன்றச் செயலாளர் ஆர். கோபாலன் மற்றும் பிரான்ஸ் வள்ளலார் சன்மார்க்க சங்கத் தலைவர் ஜெய. பாலகிருஷ்ணன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

ஆரம்பத்தில் பேராசிரியர் சுவாமி விபுலானந்த அடிகள் அரங்கு, பேராசிரியர் சு.வித்தியானந்தன் அரங்கு மற்றும் புலவர்மணி ஏ.பெரியதம்பிப் பிள்ளை அரங்கு ஆகியவற்றில் பல்வேறு தலைப்புக்களில் அறிஞர் பெருமக்களால் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

இதன்போது அதிதிகள், எழுத்தாளர்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் கலாசாலையின் முன்றலிலிருந்து இனிய வாத்தியங்கள் முழங்க பிரதான மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து பேராசிரியர் வ.கனகசிங்கம் செம்புலல் ஆய்விதழை மாவட்ட அரச அதிபர் திருமதி ஜே.முரளிதரனுக்கு வழங்கி வெளியிட்டு வைத்தார். தொடர்ந்து அதிதிகளுக்கான இதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட எழுத்தாளர்கள்,அறிஞர்கள் 21 பேருக்கும், இந்திய நாட்டு அறிஞர்கள் 60 பேருக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.






# இளைஞர்களை வலுவூட்டுதல் செயற்றிட்டம் சம்மாந்துறையில்

(சர்ஜூன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச செயலக இளைஞர் பேரவையில் உள்ள அங்கத்தவர்களுக்கு தலைமைத்துவ திறன்களை அடையாளப்படுத்தி அவர்களை வலுவூட்டுவதன் ஊடாக சவால்மிகுந்த எதிர்காலத்தை வெற்றி கொள்வதற்கு உரிய தலைமைத்துவ பண்புகளை கட்டியெழுப்புதல் நிகழ்ச்சித் திட்டமானது சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனிபா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சம்மாந்துறை உதவி பிரதேச செயலாளர் யூ.எம். அஸ்லம் ஒருங்கினைப்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கப்சோ நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.ஜே. காமில் இம்டாட், சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.அகமட் சபீர், சமூக சேவைப் பிரிவின் பிரதான முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஜனாபா ஏ.யூ.பஸீல், சமூக சேவைப் பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கப்சோ நிறுவனத்தின் வெளிக்கள இணைப்பாளர் சுமன் மற்றும் கப்சோ அமைப்பின் உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச இளைஞர் யுவதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




# மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

அம்பாறை மாவட்டம், அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட ஒலுவில் பிரதேசத்தில் இருந்து சுமார் 7 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள அஷ்ரப் நகர் எனும் குடியேற்றக் கிராமத்தைச் சேர்ந்த வசதி குறைந்த மாணவர்களுக்கு கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் அமைப்பால் பாடசாலை உபகரணங்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

சமூக செயற்பாட்டாளர்களான எம்.அஸ்கான் ஏற்பாட்டிலும் ஏ.அஸீஸ் தலைமையிலும் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அமைப்பின் ஸ்தாபகரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளரும் கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வருமான ரஹ்மத் மன்சூர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வின் ஓர் அங்கமாக இந்தப் பகுதி சமுர்த்தி பயனாளர்களுடன் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதன்போது இவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்து கொண்ட முன்னாள் பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர், அவற்றுக்கான தீர்வுகளை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் விரிவாக ஆராய்ந்தார். உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாகவும் உறுதியளித்தார்.

அத்துடன் பொதுமக்கள் தமது தேவைகள் தொடர்பிலான மகஜர்களையும் அவரிடம் கையளித்தனர்.

# தென்மாநிலங்களில் பா.ஜ.க. மிகப்பெரிய கட்சியாக மாறும்

## அடித்துக் கூறுகின்றார் பிரதமர் மோடி

புதுடெல்லி,மே20

தென்மாநிலங்களில் பா.ஜ.க.வுக்கு ஆதரவு இல்லை, வரவேற்பு இல்லை என எதிர்கட்சிகள் கூறுகின்றன. ஆனால் இந்த முறை தென் மாநிலங்களில் பா.ஜ.க. மிகப்பெரிய கட்சியாக உருவெடுக்கும். தென்மாநிலங்களில் பா.ஜ.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் அதிக தொகுதிகளை வெல்லும். தென்னிந்தியாவில் நாங்கள் (பா.ஜ.க.) தனிப்பெரும் கட்சியாக இருப்போம், மேலும் கடந்த முறையை விட இந்த முறை அதிக வாக்குகல் வித்தியாசத்தில் வெற்றி பெறுவோம்.

– இவ்வாறு பிரதமர் மோடி தெரிவித்திருக்கின்றார்.

பிரதமர் மோடி பி.டி.ஐ. செய்தி நிறுவனத்துக்கு பேட்டியளித்துள்ளார். அதிலேயே அவர் இவ்வாறு கூறியிருக்கின்றார். அந்தப் பேட்டியில் அவர் கூறியவை வருமாறு:–

பா.ஜ.கவிற்கு மக்களிடமிருந்து பெரும் ஆதரவு கிடைத்து வருகிறது. இது எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு ஒவ்வொரு நாளும் தூக்கமில்லாத




இரவை அளிக்கிறது. நாடு முழுவதும் பா.ஜ.கவிற்கு மக்கள் ஆதரவு இருப்பதால் இந்த முறை அனைத்துப் பகுதிகளிலும் வரலாற்று சாதனை படைக்கும் வகையில் வெற்றிகளைப் பெறுவோம். குறிப்பாக தெற்கிலும், கிழக்கிலும் அதிக இடங்களில் வெற்றி பெறுவோம்.

நாட்டின் சிறுபான்மையினருக்கு எதிராக இதுவரை நான் ஒருவார்த்தைக் கூட பேசியவன் அல்லன். சிறுபான்மையினருக்கு எதிராக பா.ஜ.க. ஒரு நாளும் செயல்பட்டதில்லை. சிறுபான்மை இன மக்களுக்கு எதிராக இப்போது மட்டுமல்ல எப்போதுமே நான் நடந்து கொண்டவன் அல்லன்.

நாட்டு மக்களில் யாரையும் நான் சிறப்புமக்கள்என்று அழைக்கப்படுவதை விரும்பவில்லை என்றுதான் சொன்னேன். அதை இப்படித் திரித்துச் சொல்கிறார்கள். இந்திய அரசமைப்பை உருவாக்கிய தலைவர்கள் அம்பேத்கர், நேரு, மத அடிப்படையில் இட ஒதுக்கீடு இல்லை எனக் கூறியுள்ளனர். காங்கிரஸ் கட்சியின் சூழ்ச்சிக்கு சிறுபான்மை இன மக்கள் பலியாகி விடக்கூடாது.

பா.ஜ.கவை பிராமணர்கள் கட்சி என்று சொன்னார்கள். ஆனால் பாரதிய ஜனதாவில் தலித், இதர பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான் அதிகளவு எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்களாக உள்ளனர்.

என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் பணியை பற்றி மக்களுக்கே நன்றாகத் தெரியும். 100 வயதான எனது தாயார் தனது கடைசி நாள்களை அரசு மருத்துவமனையில்தான் கழித்தார். தவறான நோக்கத்துடன் எந்த முடிவையும் எடுப்பதில்லை என்பதை மக்களிடம் ஏற்கெனவே கூறியிருக்கிறேன். – இவ்வாறு அவர் கூறினார்.




# தென்மேற்கு வங்கக்கடலில் உருவாகும் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம்

தென்மேற்கு வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகி வருவதாக தமிழகத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டிருப்பவை வருமாறு:–

✦ வரும் 22 ஆம் திகதி தென்மேற்கு வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்பு உள்ளது.

✦ காற்றழுத்த தாழ்வு பகுதி வடகிழக்கு திசையில் நகர்ந்து மே 24 ஆம் திகதி மத்திய வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற வாய்ப்பு உள்ளது.

✦ வரும் 23, 24–ஆம் திகதிகளில் வங்கக்கடல் கொந்தளிப்பாக இருக்கும்.

✦ மே 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் வடக்கு ஒடிசா மற்றும் மேற்கு வங்கத்தில் கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. 24ஆம் திகதி முதல் வடக்கு வங்கக்கடலில் 70 கி.மீ. வேகம் வரை காற்று வீசக்கூடும்.

✦ வரும் 23–ஆம் திகதி முதல் கடல் கொந்தளிப்பாக இருக்கும் என்பதால் மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம். கடலுக்கு சென்ற மீனவர்கள் மே 23–ஆம் திகதிக்குள் கரைக்கு திரும்ப அறிவுறுத்தப்பட்டுள்ளது.







# ஹெலிக்கொப்டர் விபத்தில் ஈரான் அதிபர் ரைசி மரணம்

## பலத்த சந்தேகங்களை எழுப்பியுள்ள சம்பவம்

தெஹ்ரான்,மே29

ஈரான் அதிபர் இப்ராகிம் ரைசி (வயது 63) நேற்று இடம்பெற்ற ஹெலிக்கொப்டர் விபத்தில் உயிரிழந்தார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் நேற்று அண்டை நாடான அசர்பைஜான் சென்றார். ஈரான் – அசர்பைஜான் இடையே பாயும் அரஸ் ஆற்றின் குறுக்கே புதிதாக கட்டப்பட்டுள்ள அணையின் திறப்பு விழாவில் அசர்பைஜான் அதிபர் இல்ஹாம் அலியோவ் உடன் இப்ராகிம் ரைசி பங்கேற்றார்.

இந்த நிகழ்ச்சியில் ஈரான் வெளியுறவுத்துறை மந்திரி உசைன் அமீர், கிழக்கு அசர்பைஜான் மாகாண கவர்னர் மாலிக் ரஹ்மதி மற்றும் பல அதிகாரிகள் பங்கேற்றனர். நிகழ்ச்சிக்குபின் அதிபர் ரைசி உள்பட அனைவரும் நேற்று மாலை ஈரான் புறப்பட்டனர். அதிபர் இப்ராகிம் ரைசி, வெளியுறவுத்துறை மந்திரி உசைன் அமீர் உள்பட முக்கிய தலைவர்கள் ஒரு ஹெலிக்கொப்டரிலும், பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் பிற அதிகாரிகள் மேலும் இரண்டு ஹெலிக்கொப்டர்களிலும் ஈரான் புறப்பட்டனர்.

ஈரானின் கிழக்கு அசர்பைஜான் மாகாணத்தின் ஜோல்பா நகர் அருகே பறந்து கொண்டிருந்த அதிபர் ரைசி, வெளியுறவுத்துறை மந்திரி அமீர் உள்ளிட்டோர் பயணம் செய்த ஹெலிக்கொப்டர் மட்டும் திடீரென மாயமானது. இதையடுத்து ஹெலிக்கொப்டர் விபத்துக்குள்ளாகியிருக்கலாம் எனச் சந்தேகம் எழுந்ததால் கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பு துண்டிக்கப்பட்ட பகுதியில் ஈரான் மீட்புக்குழுவினர் விரைந்து சென்று தேடுதல் பணியில் ஈடுபட்டனர்.

மலைப்பகுதி என்பதாலும் அதிக பனிமூட்டமாக இருந்ததாலும் தேடுதல் பணியில் பெரும் சிரமம் ஏற்பட்டது. 15 மணி நேரத்திற்கு மேல் தீவிர தேடுதல் பணிகள் நடைபெற்ற நிலையில் ஈரானின் கிழக்கு அசர்பைஜான் மாகாணம் தப்ரிஸ் நகர் டவில் கிராமம் அருகே உள்ள மலைப்பகுதியில் இப்ராகிம் ரைசி பயணித்த ஹெலிக்கொப்டர் விபத்துக்குள்ளானது கண்டுபிடிக்கப்பட்டது.

மலை உச்சியில் ஹெலிக்கொப்டர் விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் ஹெலிக்கொப்டரில் பயணித்த ஈரான் அதிபர் இப்ராகிம் ரைசி, வெளியுறவுத்துறை மந்திரி அமீர் உள்பட 9 பேரும் உயிரிழந்தனர். ஹெலிக்கொப்டர் தீப்பற்றி எரிந்து முழுவதும் கருகிய நிலையில் அதில் இருந்து உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், ஹெலிக்கொப்டர் விபத்தில் ஈரான் அதிபர் இப்ராகிம் ரைசி உயிரிழந்த சம்பவம் உலக அளவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மோசமான வானிலை காரணமாக ஹெலிக்கொப்டர் மலையில் மோதி விபத்துக்குள்ளானதா? தொழில்நுட்ப கோளாறால் விபத்து ஏற்பட்டதா? எதிரி நாடுகளின் தாக்குதலில் ஹெலிக்கொப்டர் வீழ்த்தப்பட்டு அதில் இருந்த அதிபர் இப்ராகிம் ரைசி உயிரிழந்தாரா? எனப் பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன.

அவற்றில் குறிப்பாக, இப்ராகிம் ரைசி பயணித்த ஹெலிக்கொப்டருக்குப் பாதுகாப்பாக மேலும் இரு ஹெலிக்கொப்டர்கள் சென்றுள்ளன. ஆனால், அந்த இரு ஹெலிக்கொப்டர்களும் எந்தவித பாதிப்பும் இல்லாமல் தரையிறங்கியுள்ளன. ரைசி பயணித்த ஹெலிக்கொப்டர் மட்டும் மலையில் மோதியுள்ளது. இதனால் இது விபத்தா? அல்லது திட்டமிட்ட சதியா? எனக் கேள்வி எழுந்துள்ளது.

காசாமுனையில் இஸ்ரேல் – ஹமாஸ் இடையேயான போர் தீவிரமடைந்து வரும் நிலையில் ஹமாஸ் ஆயுதக்குழுவினருக்கு ஈரான் ஆதரவு அளித்து வருகிறது. இதனிடையே, கடந்த மாதம் முதலாம் திகதி சிரியாவில் உள்ள ஈரான் தூதரகம் மீது இஸ்ரேல் வான்வழி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் ஈரானிய புரட்சிப்படைத் தளபதிகள் உள்பட 7 பேர் உயிரிழந்தனர்.

இந்த தாக்குதலுக்கு பதிலடியாக கடந்த மாதம் 13 ஆம் திகதி இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணை, டிரோன் தாக்குதல் நடத்தியது. இஸ்ரேல் மீது ஈரான் நேரடித் தாக்குதல் நடத்தியது அதுவே முதல்முறையாகும். இந்த தாக்குதலை இஸ்ரேல் வான்பாதுகாப்பு அமைப்பு தடுத்து நிறுத்தின. அதேபோல், அமெரிக்கா, பிரான்ஸ், ஜோர்டன் உள்ளிட்ட நாடுகளும் இஸ்ரேல் மீது ஈரான் வீசிய ஏவுகணைகளை நடுவானில் சுட்டு வீழ்த்தின. இந்தத் தாக்குதலில் இஸ்ரேலுக்கு பாதிப்பு ஏற்படவில்லை என்றாலும் தேவை ஏற்பட்டால் இதைவிட பலமடங்கு பலம் கொண்டு இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்துவோம் என்று ஈரான் எச்சரிக்கை விடுத்திருந்தது.

அதேவேளை, ஈரானின் தாக்குதலுக்கு பதிலடி கொடுப்பது குறித்து இஸ்ரேல் சொந்தமாக முடிவெடுக்கும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கடந்த மாதம் 17 ஆம் திகதி தெரிவித்திருந்தார். அவர் கூறிய 2 நாள்களில் (கடந்த மாதம் 19ம் தேதி) ஈரானின் இஷ்பஹான் நகரில் உள்ள விமானப்படைத்தளத்தில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. அதேபோல், சிரியா மற்றும் ஈராக்கில் உள்ள ஈரான் விமானப்படைத்தளங்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்நிலையில், அசர்பைஜான் சென்றுவிட்டு ஈரான் திரும்பியபோது அதிபர் இப்ராகிம் ரைசி பயணித்த ஹெலிக்கொப்டர் விபத்துக்குள்ளான சம்பவம் பல்வேறு சந்தேகங்களை எழுப்பியுள்ளது. மோசமான வானிலை காரணமாக ஹெலிக்கொப்டர் விபத்தில் சிக்கி இருக்கலாம் எனத் தகவல் வெளியான நிலையில் இஸ்ரேலின் உளவு அமைப்பான மொசாட்டிற்கும் இப்ராகிம் ரைசி மரணத்திற்கும் தொடர்பு இருக்கலாம் எனச் சந்தேகங்கள் எழுந்துள்ளன.

ஈரான் அதிபரின் மரணத்தில் அமெரிக்காவின் உளவு அமைப்பான சி.ஐ.ஏ. மற்றும் இஸ்ரேலின் உளவு அமைப்பான மொசாட்டின் சதித்திட்டங்கள் இருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது.

மோசமான வானிலை காரணமாக விபத்து நடந்திருக்கலாம் என முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனாலும், 3 ஹெலிக்கொப்டர்கள் பயணித்த நிலையில் அதிபர் இப்ராகிம் ரைசி மற்றும் வெளியுறவுத்துறை மந்திரி அமீரும் பயணித்த ஹெலிக்கொப்டர் மட்டும் விபத்தில் சிக்கியது என்பது பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது. இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்திய ஒரு மாதத்தில் அதிபர் ரைசி ஹெலிகாப்டர் விபத் தில் உயிரிழந்துள்ளார். இது மொசாட்டின் சதித்திட்டமாக இருக்கலாம் என சந்தேகம் எழுந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக முழுமையாக விசாரணை நடைபெற்றால் மட்டுமே வானிலை காரணமாக ஹெலிக்கொப்டர் விபத்தை சந்தித்ததா? அல்லது விபத்தில் மொசாட்டிற்கு பங்கு உள்ளதா? தொழில்நுட்ப கோளாறால் விபத்து ஏற்பட்டதா? என்ற பல்வேறு கேள்விகளுக்கு விடை கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.






## ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி:

# இஸ்லாமிய புரட்சியின் பின்வந்த மேற்குலகின் கடும் போக்காளர்!

■ ஐங்கரன் விக்கினேஸ்வரா

ஈரானின் இஸ்லாமிய புரட்சியானது 1979இல் அமெரிக்க ஆதரவு அரசர் முகமது ரிசா சா பலவீ ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டு, இஸ்லாமிய குடியரசு அயத்தோலா கோமெய்னி தலைமையில் புதிய ஆட்சி எழுந்தது.

45 ஆண்டுகால ஈரானிய இஸ்லாமிய புரட்சியின் பின்னர், அமெரிக்கா, இஸ்ரேலை மிகக் கடுமையாக எதிர்த்த ஜனாதிபதியாக இப்ராஹிம் ரைசி (President Ebrahim Raisi) விளங்கினார். இவரே நேற்றைய ஹெலி கொப்டர் விபத்தில் பலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**ஊகங்களும் ஊடகங்களும்**

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி ஹெலிகொப்டர் விபத்தில் பலியான நிலையில் இஸ்ரேல் நாட்டு உளவு அமைப்பான மொசாத் பின்னணியில் என பல ஊகங்கள் ஊடகங்களில் பரவலாகி வருகிறது.

டெஹ்ரான் தலைமையுடன் நீண்ட நாள் பகை யாளியான இஸ்ரேலின் வேலை என்றும், மொசாத்தான் செய்து இருக்கும் எனவும் பல சந்தேகங்கள் எழுந் துள்ளன. ஈரான் அதிபர் விபத்தில் பலியானது, திட்டமிட்ட சதி எனவும் திடீரென எழுந்த சந்தேகங்களால், சமூக ஊடகங்களில் பலத்த சர்ச்சை எழுந்துள்ளது.

இதனிடையே ஹெலிகொப்டர் விபத்துக்கும் தங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை என இஸ்ரேல் உடனடியாக விளக்கமளித்துள்ளது.

இஸ்ரேல் – ஈரான் முரண்பாடுகளுக்கு இடையே திடீரென ஈரான் அதிபர் இப்ராஹிம் ரைசி பயணித்த ஹெலிகொப்டர் விபத்துக்கு உள்ளானது. விபத்து நடந்ததாக கூறப்படும் இடத்தை டிரோன் ஒன்று உறுதி செய்த நிலையில் அந்த பகுதியில் செய்யப்பட்ட சோதனையில் ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி ஹெலிகாப்டர் விபத்தில் மரணம் அடைந்தது உறுதியானது.

ஹெலிகொப்டரில் ஈரானிய அதிபர் இப்ராஹிம் ரைசி, அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் ஹொசைன் அமிரப்துல்லாஹியன், ஈரானின் கிழக்கு அஜர்பைஜான் மாகாண ஆளுநர் மற்றும் பிற அதிகாரிகள் மற்றும் பாதுகாவலர்கள் இருந்ததாக அரசு தெரிவித்துள்ளது. இவர்கள் எல்லோரும் விபத்தில் பலியாகி உள்ளனர்.

**ஈரானில் 1979 இஸ்லாமிய புரட்சி**

ஈரானிய புரட்சிக்கு இடதுசாரி அமைப்புகளும் இசுலாமிய ஈரானிய மாணவர் இயக்கமும் துணை புரிந்தன. புரட்சியின் தொடக்கத்தில் சா அரசைக் காப்பாற்ற சோவியத் ஒன்றியம் முயன்றாலும் இஸ் லாமிய குடியரசைச் சோவியத் ஒன்றியம் உடனடியாக ஏற்றுக்கொண்டது.

ஈரானிய புரட்சி உலகுக்கு பெரும் வியப்பை அளித்தது. இப்புரட்சிக்கு பொருளாதார நெருக்கடி, அடித்தட்டு மக்களின் புரட்சி, போரில் தோல்வி, கட்டுப் படாத இராணுவம் போன்ற காரணங்கள் இப்புரட்சிக்கு வழிவகுத்தது.

இப்புரட்சி மேற்குலக சார்பு மன்னராட்சியை நீக்கி விட்டு மேற்குலக எதிர்ப்புக் கொண்ட இசுலாமிய ஆதிக்க கொள்கை உடையதாக மாறியது.

ஈரானிய புரட்சி வேகமாகப் பரவியதற்குத் தேசிய வாதம், கலாச்சாரம் மேற்கத்தியமாவதற்கும், மதச்சார் பற்ற முயற்சிகளும் எதிரான பழமைவாத சியா இசுலாமியர்களின் கிளர்ச்சியும், சமூக அநீதிக்கு எதிரான இடது சாரிகளின் போராட்டமும் முக்கிய காரணங்களாகும்.

1973 எண்ணெய் வளத்தில் கிடைத்த பெரும் பணத்தால் நிறைவேற்ற முடியாத பொருளாதாரத் திட்டங்களைத் தீட்டியதும், 1977-78 இல் ஏற்பட்ட தற்காலிக கடும் பொருளாதார சிக்கலும் காரணமாகும். அத்துடன் மன்னர் சாவின் ஆட்சி ஊழலும் அடக்குமுறை யும் மிகுந்ததாக இருந்தது.

மன்னர் சா முஸ்லிம் அல்லாத மேற்கு நாடுகளின் குறிப்பாக ஐக்கிய அமெரிக்காவின் கையாளாகப் பார்க்கப்பட்டார். அதே சமயத்தில் சாவுக்கு மேற்குலக அரசியல்வாதிகளிடமும் ஊடகங்களிடமும் செல்வாக்கு பிற்காலத்தில் குறைந்தது.

**இஸ்ரேல் - ஈரான்**
**நீண்ட போர் முரண்**

இஸ்ரேல் – ஈரான் இடையே நீண்டகாலமாக கடுமை யான முரண்பாடுகள் நிலவி வருகிறது. இஸ்ரேலியப் படைகள் கடந்த சில மாதம் முன் சிரியா தலைநகர் டமாஸ்கஸ் மற்றும் சிரியா வடக்கு நகரமான அலெப்போவில் உள்ள விமான நிலையங்கள் மீது நேரத்தில் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியது.

அதன்பின் கடந்த ஏப்ரல் முதலாம் திகதி சிரியாவில் இருக்கும் ஈரான் தூதரகம் மீது, இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இங்குதான் மோதல் உச்சம் பெற்றது.

இஸ்ரேல் தாக்குதல் நடந்த போது ஈரான் ராணுவ அதிகாரிகளின் கூட்டம் நடந்து கொண்டு இருந்தது.

சர்வதேச விதிமுறைகளின் படி தூதரகங்களை தாக்க கூடாது. இதனால் அங்கே ஈரான் ராணுவ அதிகாரிகளின் கூட்டம் நடந்தது. ஆனால் அதை மீறி இங்கே இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது.

ஆனால் சர்வதேச ஐ.நா. விதிகளை மீறி தூதரக வளாகத்தின் மீது வான்வழித் தாக்குதலில் இஸ்ரேல் ஈடுபட்டது. இதில் ஏழு ஈரானிய அதிகாரிகள் கொல லப்பட்டனர். ஈரானின் உயர்மட்ட ராணுவ அதிகாரிகளில் ஒருவரான பிரிகேடியர் ஜெனரல் முகமது ரெசா ஜாஹேதி கொல்லப்பட்டார். இவர் புரட்சிகர காவல்படையின்

தொடர்ச்சி▼



# இஸ்லாமிய புரட்சியின் பின்வந்த மேற்குலகின் கடும் போக்காளர்!

தொடர்ச்சி▲

(IRGC) மூத்த தளபதி ஆவார்.

**ஈரான் பதிலடி தாக்குதல்**

இந்த தாக்குதலுக்குப் பின்னர் ஈரான் பாரிய பதிலடி கொடுத்தது. இஸ்ரேலின் உள்ளே ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியது. இதற்கு இஸ்ரேலும் பதில் தாக்குதல் நடத்தியது.

தற்போது இஸ்ரேல் ஈரான் இடையே முரண்பாடுகள் போராக மூண்டுள்ளது.



பல வருடங்களாக இரண்டு நாடுகளுக்கு இடையில் புகைச்சல் இருந்து வந்த நிலையில் தற்போது இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்திய பின்னர், பெரும் அபாயம் ஏற்பட்டது.

**ஈரானின் மறைமுக யுத்தம்**

சிரியாவில் ஹெஸ்புல்லா படையினருக்கு ஈரான் நீண்டகால ஆதரவு வழங்குகிறது. இவர்கள்தான் பாலஸ்தீனத்தில் ஹமாஸ் படைக்கு உதவி செய்வதாக இஸ்ரேல் கூறுகின்றது.

இவர்களின் ஆதரவின் பெயரிலேயே ஹமாஸ் படைகள் இயங்கி வருகிறது. இந்த நிலையில்தான் சிரியாவில் உள்ள ஈரான் தூதரகம் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது எனவும் கூறப்பட்டது.

அதேவேளை ஏமனில் 'ஹவுதி கிளார்ச்சியாளார்கள்' உருவாக்கப்பட்டதன் காரணமே சவுதி அரேபியா – ஈரான் இடையிலான திரை மறைவில் எழுந்த ஆதிக்கப்போராகும் என்ற கருத்தும் உள்ளது.

ஏமன் உள்நாட்டுப் போர் சவுதி தலைமையில் அதன் கூட்டணிக்கும் ஏமனிலுள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு இடையில் நடந்து வருகிறது.

இதில் சவுதி அரேபியாவை எதிர்க்கும் ஈரான் நாடு, ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து வருகிறது. அமெரிக்கா இதில் சவுதி அரேபியாவுக்கு ஆதரவளித்து வருகிறது. இருப்பினும், இது மறைமுகமாக ஈரான் மற்றும் சவுதி அரேபியாவுக்கு நடக்கும் போராகவே கருதப்படுகிறது.

அதேவேளை, ஏமனில் உள்ள ஹவுதிகளுக்கு எதிராக பல இடங்களில் பல நாடுகள் ஒன்றிணைந்து இவ்வருட ஆரம்பத்தில் வான் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

ஆஸ்திரேலியா, பஹ்ரைன், கனடா மற்றும் நெதர்லாந்தின் ஆதரவுடன் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து போர் விமானங்கள், போர்க்கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்கள் கூட்டாக இந்த தாக்குதலை மேற்கொண்டன.

**ஈரான் ஜனாதிபதி**

**ஹெலி விபத்தில் சந்தேகம் ?**

ஈரான்–அஜார்பைஜான் எல்லையில் உள்ள அராஸ் நதியில் இரு நாடுகளும் இணைந்து கட்டிய 3 ஆவது அணையின் திறப்பு விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் அஜார்பைஜான் ஜனாதிபதி இல்ஹாம் அலியெவுடன் ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி பங்கேற்றார்.

இஸ்ரேலுடன் ஈரான் பகைமை கொண்டுள்ள நிலையில் இஸ்ரேலுடனான அஜார்பைஜானின் ராஜீய உறவு, ஈரான் தலைநகர் டெஹ்ரானில் உள்ள அஜார்பைஜான் தூதரகம் மீது துப்பாக்கிச்சூடு தாக்குதல் ஆகிய காரணங்களால் ஈரான்–அஜார்பைஜான் இடையிலான உறவில் கடும் விரிசல் ஏற்பட்டுள்ளது. எனினும், அணை திறப்பு நிகழ்ச்சியில் இல்ஹாமும் ரைசியும் ஒன்றாகப் பங்கேற்றனர்.

மோசமான வானிலை காரணமாக அதிபர் சென்ற ஹெலிகொப்டர் அஜர்பைஜானின் ஜோல்ஃபா பகுதியில் மலை முகடுகளில் மோதி நொறுங்கி தீப்பிடித்தது. விபத்து நடந்து 17 மணி நேரத்துக்குப் பிறகு ஹெலிகொப்டரின் உடைந்த பாகங்கள் கண்டறியப்பட்டன.

தொடர் மழை காரணமாக விபத்து நடந்த இடத்தை கண்டுபிடிப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. 15 மணி நேரம் கழித்தே விபத்து நடந்த இடத்தை மீட்புப் படை நெருங்கியது. வனம் மற்றும் மலைப் பகுதியில் கடும் போராட்டத்துக்குப் பின் ஹெலிகொப்டரின் பாகங்கள் மீட்கப்பட்டுள்ளன.

விபத்தில் சிக்கிய ஹெலிகொப்டர் முற்றிலும் எரிந்து சேதமடைந்தது. பாதுகாப்புக்கு சென்ற 2 ஹெலிகொப்டர் குறிப்பிட்ட இடத்துக்கு சென்றபோதிலும் ஈரான் ஜனாதிபதி ஹெலிகொப்டர் மட்டுமே விபத்தில் சிக்கியது.

ஈரான் அதிபர் இப்ராஹிம் ரைசி ஹெலிகொப்டர் விபத்தில் பலியாகி உள்ள நிலையில் இஸ்ரேல் நாட்டு உளவு அமைப்பான மொசாத் மீது பலத்த சந்தேகங்கள் எழுந்து வருகிறது. இது இஸ்ரேல் வேலையாக இருக்குமோ என்ற விவாதம் எழுந்துள்ளது.

பக்கங்கள் 05

கனடா முரசு

திங்கட்கிழமை 20/05/2024

## ஸ்கார்பரோவில் சூடு ஒருவருக்குக் காயம்

ஒன்ராரியோ, மே 20

ஸ்கார்பரோ பகுதியில் வீடொன்றிற்கு வெளியே இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார். C2



# டொரன்டோவில் இடைத்தேர்தல் ஜூன் 24ஆம் திகதி என அறிவிப்பு

ஒன்ராரியோ, மே 20

டொரன்டோ-சென் போல்ஸ் தொகுதிக்கான இடைத்தேர்தல் ஜூன் மாதம் 24ஆம் திகதி நடைபெறும் என பிரதமரின் அலுவலகம் அறிவித்துள்ளது.

லிபரல் கட்சியின் நீண்ட கால அமைச்சராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்த கரோலின் பென்னட் அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதாக 2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அறிவித்திருந்தார். C2

# ரோஹிங்கியா மக்களுக்கு உதவும் கனடா உபாயத்தில் மாற்றம் தேவை

## விசேட பிரதிநிதியான பொப் ரே கோரிக்கை

ஒன்ராரியோ, மே 20

ரோஹிங்கியா மக்களுக்கு உதவி செய்யும் கனடிய மூலோபாயத்தில் மாற்றத்தினை அரசாங்கம் மீளாய்வு செய்ய வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷில் அகதி முகாம்களில் துன்பத்தை இல்லாது செய்வதற்கும், மியன்மாரில் இனக்கலவரத்தை மேற்பார்வையிடும் இராணுவ ஆட்சிக்குழுவை முறியடிக்கவும் கனடிய அரசாங்கம் எவ்வாறு முயற்சிக் கின்றது என்பதனை மறுபரிசீலனை செய்ய வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் நாம் கவனம் செலுத்தாது இருக்க முடியாது என ஐக்கிய நாடுகளுக்கான கனடியத் தூதுவர் பொப் ரே தெரிவித்துள்ளார்.

ரோஹிங்கியாக்கள் எதிரான வன்முறையைத் தொடர்ந்து 2017ஆம் ஆண்டில் மியன்மாருக்கான விசேட பிரதிநிதியாக பொப் ரேயினை பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நியமித்தார்.





# காசாவில் இருந்து வருபவர்களின் விசா; கனடா அணுகுமுறை குறித்துக் கேள்வி!

ஒன்ராரியோ, மே 20

காசாவில் இருந்து வருபவர்களின் விசா நடைமுறையில் கனடாவின் அணுகுமுறை குறித்து சட்டத்தரணிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தமது குடும்பத்தினருடன் இணைவதற்கு காசாவில் இருந்து வந்த மருத்துவ ஊழியரிடம் ஹமாஸுக்கு சிகிச்சைக்கு வழங்கினாரா என எழுப்பப்பட்ட கேள்வியைத் தொடர்ந்தே சட்டத்தரணிகள் இந்த சந்தேகத்தை எழுப்பியுள்ளனர்.

காயமடைந்த ஹமாஸ் உறுப்பினர்களுக்கு சிகிச்சை அளித்தீர்களா என கனடிய குடிவரவு அதிகாரி ஒருவர் விண்ணப்பதாரி ஒருவரிடம் கோரியுள்ளார்.

அவ்வாறு சிகிச்சையளிக்கவில்லையெனின், எவ்வாறு சிகிச்சையளிப்பதற்கான ஹமாஸின் கோரிக்கையை நிராகரித்தீர்கள் என அவரிடம் வினவப்பட்டுள்ளது.

யுத்த வலயத்தில் காயமடைந்த எவருக்கும் சிகிச்சையை மறுப்பது ஜெனீவா சாசனத்தின் மீறல் என டொரன்டோவை மையமாகக் கொண்ட குடிவரவு சட்டத்தரணி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

## டொரன்டோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரோலின் பென்னட் சுமார் 26 வருடங்கள் இந்தத் தேர்தல் தொகுதியைப் பிரதிநிதித்துவம் செய்து நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார்.

அரசியலில் இருந்து விலகிய கரோலின் பென்னட் டென்மார்க்கிற்கான தூதுவராக பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தேர்தல் தொகுதிக்கு லிபரல் கட்சியின் நீண்டகால உறுப்பினரான லெஸ்லி சேர்ச் வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கன்சர்வேட்டிவ் கட்சி சார்பில் கட்சியின் நிதிசார் நிபுணரான டொன் ஸ்டீவர்ட்டும், புதிய ஜனநாயகக் கட்சி சார்பில் இலாப நோக்கற்ற நிறுவனத்தின் பணிப்பாளர் ஒருவரான அம்ரிட் பர்ஹாரும் போட்டியிடவுள்ளனர்.

## ஸ்கார்பரோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டென்போர்த் மற்றும் கென்னடி வீதியில் கோல்ட்டன் அவனியுவில் வீடொன்றிற்கு வெளியே ஏற்பட்ட தகராறு துப்பாக்கிப் பிரயோகத்திற்கு வழிகோலியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த நபர் உயிருக்கு ஆபத்தற்ற காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.





# ஃபோர்ட் நெல்சன் பகுதியில் காட்டுத் தீயில் வீடுகள் சேதம்

## 47,000 பேர் இடம்பெயர வேண்டிய நிலை

பிரிட்டிஷ் கொலம்பியா, மே 20

பிரிட்டிஷ் கொலம்பியாவின் ஃபோர்ட் நெல்சன் பகுதியில் இடம்பெற்ற காட்டுத் தீயில் பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

பத்து வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன எனவும், நான்கு வீடுகள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மே 10ஆம் திகதி பார்கர் லேக் பகுதியில் இடம்பெற்ற காட்டுத் தீயின் காரணமாக இந்த வீடுகள் சேதமடைந்துள்ளன.

இந்தக் காட்டுத்தீயானது இப்போது மேற்கே 123 சதுர கிலோமீற்றருக்கு நகர்ந்துள்ளதுடன், சுமார் 47,000 பேர் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.




# லிபரல் எம்.பி. ஜோன் அல்டெக் கட்சியிலிருந்து விலகுகின்றார்

பிரிட்டிஷ் கொலம்பியா, மே 20

பிரிட்டிஷ் கொலம்பியாவைச் சேர்ந்த லிபரல் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அல்டெக் கட்சியிலிருந்து விலகுகின்றார் என அறிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் கொலம்பியாவுக்கான அடுத்த மாகாணத் தேர்தலில் புதிய ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக அவர் களமிறங்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

2015ஆம் ஆண்டு முதல் பிரிட்டிஷ் கொலம்பியாவின் கிலவர்டேல்-லேங்லி சிட்டியைப் பிரதிநிதித்துவம் செய்த அல்டெக், மே 27ஆம் திகதி தமது ஆசனத்திலிருந்து விலகப் போகிறார் என அறிவித்துள்ளார்.

2019ஆம் ஆண்டில் கன்சர்வேட்டிவ் கட்சியின் டமாரா ஜென்சனினால் இவர் தோல்வியடையச் செய்யப்பட்டாலும், 2021ஆம் ஆண்டில் மீண்டும் வெற்றி பெற்றார்.




# பிறைட் நிகழ்வுகளில் கலந்து கொள்ள அல்பேர்ட்டாவின் முதல்வருக்குத் தடை

அல்பேர்ட்டா, மே 20

பிறைட் நிகழ்வுகளில் அல்பேர்ட்டாவின் முதல்வர் கலந்து கொள்வதற்கு பிறைட் சமூகங்கள் தடை விதித்துள்ளன.

யுனைட்டட் கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த அல்பேர்ட்டாவின் முதல்வர் டேனியல் ஸ்மித் 2024ஆம் ஆண்டு பிறைட் நிகழ்வுகளில் கலந்துகொள்ள பிறைட் சங்கங்கள் தடை விதித்துள்ளன என.

இது தொடர்பில் குயர் சிட்டிசன்ஸ் யுனைட்டட் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான மாகாணத்தின் பால்நிலை கொள்கைகளில் இந்த வருட ஆரம்பத்தில் டேனியல் ஸ்மித் அறிவித்த மாற்றங்களிற்கு பதிலளிக்கும் முகமாகவே இந்த தடை விதிக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அல்பேர்ட்டாவின் மாற்றுப்பாலினத்தின் சமூகத்தின் உரிமைகள், சுதந்திரம் மற்றும் சுகாதார பராமரிப்பினை மீறும் நோக்கத்துடனானதாக முதல்வரின் அறிவிப்பு இருப்பதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# கிங்ஸ்டனின் படகு விபத்தில் மூன்று பேர் பலி; ஐவர் காயம்

ஒன்ராரியோ, மே 20

கிங்ஸ்டனின் வடக்குப் பகுதியில் இடம்பெற்ற படகு விபத்தில் மூன்று பேர் உயிரிழந்துள்ளமையுடன், ஐந்து பேர் காயமடைந்துள்ளனர்.

ஒன்ராரியோவின், கிங்ஸ்டன் வடக்கு ஏரியில் இரண்டு படகுகள் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மீன்பிடி படகும், விரைவுப் படகும் மோதியதால் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

உயிரிழந்தவர்களில் 21 வயதான மற்றும் 23 வயதான இரு ஆண்களும், 22 வயதான பெண்ணும் உள்ளடங்குகின்றனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இவர்கள் மூவரும் சம்பவ இடத்தி லேயே உயிரிழந்தனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்களில் 21 முதல் 44 வயதானவர்கள் அடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.





# இறுதி கிரியைகளுக்கான செலவு அதிகம் சடலங்களை உரிமை கோரப் பின்னடிப்பு!

கனடாவில் இறந்தவர்களுக்கான இறுதி கிரியைகளை நடத்துவதில் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இறக்கும் உறவினர்களது இறுதி கிரியைகளை முன்னெடுப்பதற்கு போதிய அளவு பொருளாதாரம் இயலுமை இல்லாத காரணத்தினால் மக்கள் தங்கள் நேசத்திற்குரியவர்களது சடலங்களை உரிமை கோருவதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கனடாவின் சில மாகாணங்களில் இவ்வாறான சம்பவங்கள் அண்மைய ஆண்டுகளாக அதிக அளவில் பதிவாகின்றன.

இறுதி கிரியைகளை நடத்துவதற்கான செலவுகள் தொடர்ச்சியாக அதிகரித்து செல்லும் போக்கு பதிவாகியுள்ளது.

1998 ஆம் ஆண்டு 6,000 டாலர்களாக காணப்பட்ட இறுதிக் கிரியை செலவு தற்போது 8,800 டாலர்களாக அதிகரித்துள்ளது.

கனடாவின் அதிக சனத்தொகை வாழும் மாகாணமான ஒன்றாரியோவில் கடந்த 2013 ஆம் ஆண்டு உரிமை கோரப்படாத சடலங்களின் எண்ணிக்கை 242 என தெரிவிக்கப்படுகிறது.

எனினும் கடந்த 2023 ஆம் ஆண்டு இந்த எண்ணிக்கை 1,183 ஆக அதிகரித்துள்ளது.

இவ்வாறு உரிமை கோரப்படாத சடலங்களது நெருங்கிய உறவினர்கள் அடையாளம் காணப்பட்ட போதிலும் பல்வேறு காரணிகளினால் அவர்கள் அந்த சடலத்திற்கான உரிமையை கோருவதில்லை என தெரிவிக்கப்படுகிறது.

செலவுகளை சமாளிக்க முடியாத காரணத்தினால் இவ்வாறு சடலங்கள் உரிமை கோரப்படுவதில்லை என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.



# கனடாவிலிருந்து வெளிநாடு ஒன்றுக்கு கடத்தப்படவிருந்த விலாங்கு மீன்கள்!

## றொறன்ரோ பியர்சன் விமான நிலையத்தில் பிடிபட்டன

கனடாவின் றொறன்ரோ பியர்சன் விமான நிலையத்தில் இருந்து வெளிநாடு ஒன்றுக்கு அனுப்பி வைக்கப்படவிருந்த சுமார் ஐந்து லட்சம் டொலர் பெறுமதியான விலாங்கு மீன் குஞ்சுகள் மீட்கப்பட்டுள்ளன.

சுமார் 109 கிலோ கிராம் எடையுடைய விலாங்கு மீன் குஞ்சுகள் மீட்கப்பட்டன என விமான நிலையப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நோவா ஸ்கோஷியாவிலிருந்து சட்டவிரோதமாக மீன்களைப் பிடித்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய எவரும் முயற்சிக்க வேண்டாம் என அரசாங்கம் கோரியுள்ளது. இவ்வாறான முயற்சிகள் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு முறியடிக்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

இந்த விலாங்கு மீன்கள் சட்டவிரோதமான முறையில் ஆசிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.